Department of Education, Sabaragamuwa Province / Weekly School Department of Education, Sabaragamuwa Province / Weekly School Department of Education, Sabaragamuwa Province / Weekly School Department of Education, Sabaragamuwa Province / Weekly School

# சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்
## வாரப் பாடசாலை

பாடம் - பொருளியல்
வாரம் - 02
தரம் - 13

தயாரிப்பு : S. வசந்தமூர்த்தி
இ/ஸ்ரீ கிருஷ்ணா மகா வித்தியாலயம்

**தேர்ச்சி 7.0 :** பணம் மற்றும் விலை மட்டங்களின் நடத்தையை இனங்கண்டு பொருளாதாரத்தின் செயற்பாட்டுக்கு வங்கியமைப்பு பங்களிக்கும் விதத்தினை ஆய்வு செய்வார்.

**தேர்ச்சி மட்டம் 7.2 :** பணத்துக்குக் கேள்வியொன்று ஏற்படுவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளையும் பணத்தின் கேள்வியைத் தீர்மானிக்கும் காரணிகளையும் ஆய்வு செய்வார்.

**பணக்கேள்வி -** குறிப்பிட்ட ஒரு சந்தர்ப்பத்தில் பணத்தைப் பணமாகத் தம்மிடம் வைத்திருப்பதற்குப் பொது மக்களிடம் காணப்படும் விருப்பம் பணத்தின் கேள்வி (திரவத்தேர்வு) என அழைக்கப்படும்.

பணத்துக்குக் கேள்வி ஏற்படுவதில் செல்வாக்குச் செலுத்தும் பிரதான காரணங்கள் மூன்றாகும்.

(1) கொடுக்கல் வாங்கல் நோக்கம்
(2) பாதுகாப்பு நோக்கம்
(3) உத்தேச நோக்கம்

பணத்திற்கான கேள்வியில் தாக்கம் செலுத்தும் காரணிகள் வருமாறு : **MD = F (Y. R. P )**

- மெய் வருமானம்
- வட்டி வீதம்
- விலைமட்டம்
- எதிர்பார்க்கை
- நிறுவனக் காரணிகள்
- நிதிச் சந்தையில் தோன்றும் நவீன கண்டுபிடிப்புகள்

**பயிற்சிகள் :**

01. திரவத் தன்மை என்றால் என்ன? விளக்குக.

02. உயர் வருமானம் தரக்கூடிய சொத்துக்கள் இருக்கின்ற நிலையிலும் மக்கள் பணத்தை பணவடிவில் வைத்திருக்க விரும்புவது ஏன்?

03. பின்வரும் காரணிகள் பணத்திற்கான கேள்வியில் எத்தகைய தாக்கங்களை ஏற்படுத்தும் என்பதை விளக்குக.

    அ. மெய் வருமானம்
    ஆ. பொது விலை மட்டம்